

# மையப் பிரச்சினை: அன்பா? சுயநலமா?

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** லூக்கா 19:41–44; மத் 23:37, 38; எபி 11:35–38; வெளி 2:10; அப் 2:44–47; யோவான் 13:35.

**மனன வசனம்:** நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். ஏசாயா 41:10.

எருசலேமை நோக்கியுள்ள ஒலிவ மலைமேல் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்போது சத்தம் கேட்கிறது. அது இயேசுவின் சத்தமென உடனடியாகப் புரிகிறது. சூரியனின் அஸ்தமன ஒளி தேவாலயத்தின் வெண்ணிறப் பளிங்கு சுவர்களில் பட்டு பிரதிபலிக்கிறது; அச்சமயத்தில் இயேசு, ‘இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்’ என்றார். மத் 24:2.

சீடர்கள் குழம்புகிறார்கள்; உங்களுக்கும் குழப்பமாக இருக்கிறது. இயேசு எதைப் பற்றிச் சொல்லியிருப்பார்? உலகத்தின் முடிவுபற்றி இயேசுவின் சீடர்கள் கேள்வி எழுப்பினதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? எருசலேமின் அழிவுக்கு வழிவகுக்கவிருந்த நிகழ்வுகளையும், அதை தம் வருகைக்கு முந்தைய நிகழ்வுகளோடு சம்பந்தப்படுத்தி அவர் சொல்வதையும், ஆர்வத்தோடு கேட்கிறீர்கள்.

காலத்தின் முடிவில் தேவமக்களை வஞ்சிக்கவும் அழிக்கவும் சாத்தான் எடுக்கிற முயற்சிக்கு எருசலேமின் அழிவு முன்னடையாளமாக இருக்கிறது. மத்தேயு 24இல், எருசலேமுடைய அழிவின் பின்னணியில், கடைசிக்கால நிகழ்வுகள்பற்றி இயேசு சொல்வது தெளிவாகிறது.

தேவமக்களை வஞ்சிக்கவும் அழிக்கவும் சாத்தான் எடுக்கிற வியூகம் பற்றிப் படிப்போம். உபத்திரவம்மூலமாக நிறைவேற்ற முடியாததை, அந்தக் கொடியவன் சமரசம்மூலம் சாதிக்க முயலுகிறான். தேவனுக்கு தெரியாதது எதுவுமில்லை; மிகவும் சவாலான நேரங்களிலும் தம் மக்களைப் பாதுகாக்கிறார்.

***மாபெரும் போராட்டம், 29-30ஆம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஏப்ரல் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# உள்ளம் உடைந்த இரட்சகர்

எருசலேமை நோக்கியிருந்த ஒலிவமலைமேல் இரட்சகர் உட்கார்ந்திருந்த போது, மனமுடைந்து காணப்பட்டார். 'அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை' யோவான் 1:11. அவர்கள் மிகவும் நேசித்த நகரம் அழியவிருந்தது; அதிலிருந்து தம் மக்களைக் காப்பாற்ற தம்மால் இயன்றை அனைத்தையும் இயேசு செய்தார்.

இயேசு தம் மக்கள்மேல் அளவற்ற அன்பு வைத்திருந்தார். மனந்திரும்பவும், தாம் கிருபையாக அருளும் இரக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் மீண்டும் மீண்டும் மன்றாடினார்.

**மக்கள்மீது இயேசு காண்பித்த அக்கறையையும், அவர்களை கிருபையோடும் இரக்கத்தோடும் அழைத்தபோது அவர்கள் பதிலளித்த விதத்தையும்பற்றி லூக்கா 19:41-44; மத்தேயு 23:37, 38; யோவான் 5:40 என்ன சொல்கின்றன? இதில் தேவகுணம் பற்றிய என்ன வெளிப்பாட்டைக் காணமுடிகிறது?**

எருசலேமின் அழிவுபோன்ற ஒரு நிகழ்வை தேவனுடைய அன்பின் பின்னணியில் புரிந்துகொள்வது கடினம். அந்த நகரத்தின்மேல் போர்தொடுத்த ரோமத் தளபதியான தீத்து ராயன், லட்சக்கணக்கானோரைக் கொன்றதாக வரலாறு வெளிப்படுத்துகிறது. எருசலேம் பாழாக்கப்பட்டது. குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டார்கள். தம் மக்களின் மிகுந்த உபத்திரவத்தின்போது தேவன் எங்கே இருந்தார்? பதில் தெளிவாக உள்ளது; ஆனால் புரிந்துகொள்வதுதான் கடினம். தேவனுடைய உள்ளம் உடைந்தது. கண்களில் கண்ணீர் கொட்டின. பல நூற்றாண்டுகளாக தம் மக்களை அணுகிவந்தார். ஆனால் அவரது அன்பின் இரக்கத்திற்கு எதிராகக் கலகம்செய்து, அவரது தெய்வீகப் பாதுகாப்பை நிராகரித்தார்கள். தம் மக்களின் தீர்மானங்களால் ஏற்படுகிற விளைவுகளைக் கட்டுப்படுத்த தேவன் எப்போதும் செயல்படுவதில்லை. கலகத்தின் இயல்பான விளைவுகள் உருவாக அனுமதிக்கிறார். எருசலேம் அழிக்கப்பட்டபோது, குற்றமறியா சிறுவர்கள் கொலைசெய்யப்பட்டதற்கு தேவன் காரணமல்ல: சிறுவர்களின் கொடிய மரணத்திற்கு சாத்தான்தாம் காரணம்; தேவனல்ல.

யுத்தம் மனித இருதயத்தின் கொடிய உணர்வுகளைத் தூண்டுகிறது; சாத்தான் அதில் மகிழ்ச்சியடைகிறான். நூற்றாண்டுகள் நெடுகிலும், வஞ்சிப்பதும், அழிப்பதும், பிறகு தன் தீயசெயல்களுக்கு தேவன்மேல் பழிபோடுவதும் அவனுடைய நோக்கமாக இருக்கிறது.

**எருசலேமுக்கு நேரிடவிருந்த அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள தம் மக்களுக்கு இயேசு சொன்ன அறிவுரை என்ன?**

கி.பி. 70இல் எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் யூதப் பின்னணியைச் சேர்ந்தவர்கள். தம் மக்களில் காப்பாற்ற முடிந்தவர்களை எல்லாம் காப்பாற்ற அன்புள்ள தேவன் ஆசைப்பட்டார். அதனால்தான் ரோமப் படைகள் வரும்போது, அந்தப் பட்டணத்தை விட்டு ஓடும்படி சொன்னார்.

---

**நம்மைச் சுற்றிலும் நிகழ்கிற நிகழ்வுகளை வைத்து தேவனுடைய குணத்தை நாம் மதிப்பிடுவதில்லை; மாறாக, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய அன்பின் குணம் எனும் கண்ணாடி வழியாகவே எல்லா நிகழ்வுகளையும் பார்க்கிறோம். இதன் அர்த்தம்பற்றித் தியானியுங்கள்; இது ஏன் ஒரு நல்ல ஆலோசனையாக இருக்கிறது?**

# தேவ வழிநடத்துதலால் கிறிஸ்தவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்

எருசலேமின் அழிவு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் தேவனுடைய இரக்கமும், கிருபையும், வழிநடத்துதலும், முன்னறிவும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. செஸ்டியஸ் கேலஸும் ரோமப்படைகளும் நகரத்தை முற்றுகையிட்டார்கள். தாக்கப்போகிறார்கள் என்று எதிர்பார்த்திருந்த சமயத்தில் எதிர்பாராமல், பின்வாங்கினார்கள். யூதப்படையினர் அவர்களை விரட்டிச்சென்று, மிகப்பெரிய வெற்றிபெற்றார்கள்.

ரோமர்கள் தப்பியோட, யூதர்கள் அவர்களைத் துரத்த, எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் யோர்தான் நதிக்கு அப்பால் பெரேயாவிலிருந்த பெல்லா எனும் இடத்திற்குத் தப்பிச்சென்றார்கள். 'முன்னறிவிக்கப்பட்ட அடையாளத்திற்காகக் காத்திருந்த கிறிஸ்தவர்களுக்கு அதன் நிறைவேறுதல் தெரிந்தது; இரட்சகரின் எச்சரிப்புக்குக் கீழ்ப்படியக்கூடிய அனைவரும் தப்பி ஓடுவதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் ஓடிப்போவதற்கு யூதர்களோ ரோமர்களோ இடையூறுசெய்யாத அளவுக்கு நிகழ்வுகள் நடந்தன'.

**மிகுந்த அக்கறையோடு தேவன் வழிநடத்துவதுபற்றி சங் 46:1; ஏசா 41:10 சொல்வது என்ன?**

தேவன் சர்வமகத்துவர்; பூமியில் தம் தெய்வீக நோக்கங்கள் நிறைவேறும்படி நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துகிறார். சிலசமயங்களில், மனிதர்களின் தீர்மானங்களுக்கேற்ப தம் ஆதித் திட்டங்களை அவர் மாற்றினாலும், இந்தப் பூமி குறித்த அவரது இறுதி நோக்கம் நிறைவேறும். சிலசமயங்களில் தேவபிள்ளைகளுக்கு கிறிஸ்துவின்நிமித்தம் கஷ்டங்களும், உபத்திரவமும், சிறைத்தண்டனையும், மரணமும் நேரிடலாம். ஆனால், மிகவும் சவாலான நேரங்களிலும்கூட, தேவன் தம்முடைய திருச்சபையை பராமரித்துப் பாதுகாக்கிறார்.

**தீயவல்லமைகளோடு நாம் யுத்தம்செய்வதின் உண்மைபற்றி எபி 11:35-38; வெளி 2:10 வெளிப்படுத்துவது என்ன? தேவனுடைய பாதுகாப்புகுறித்த முந்தின கேள்வியையும், இந்தக் கருத்தையும் எவ்வாறு ஒருங்கிணைத்துப் பார்க்கமுடிகிறது? ஒரு பக்கம் தேவன் பாதுக்கிறார் என்பதும், இன்னொரு பக்கம் சிலருக்கு பயங்கர உபத்திரவத்தை அனுமதித்து, கிறிஸ்துவின்நிமித்தம் இரத்தசாட்சியாக மரிக்கவும் விடுகிறார் என்பதும் முரணான கருத்துகள்போலத் தோன்றுகின்றனவா?**

'வன்முறையால் கிறிஸ்துவின் சபையை அழிக்க சாத்தான் எடுத்த முயற்சிகள் வீணாயின. மாபெரும் போராட்டத்தில் கிறிஸ்துவின் சீடர்கள் உயிர்விட்டாலும், உண்மையோடு கொடியேந்திப் போராடின இவர்கள் மரித்தவுடன் அந்தப் போராட்டம் நின்றுவிடவில்லை. தோல்வியுற்றதுபோல் தெரிந்தாலும் இவர்களே வென்றார்கள். தேவனுடைய பணியாளர்கள் கொல்லப்பட்டார்கள்; ஆனாலும், அவருடைய பணி சீராகத் தொடர்ந்தது'.

---

**வேதாகம எழுத்தாளர்கள் வேதனை, பாடுகள்பற்றி நன்றாக அறிந்திருந்த போதிலும், தேவன் அன்புள்ளவர் என்கிற உண்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள்; அதற்கு காரணம் என்ன? அந்த அன்பை நாம் எவ்வாறு அனுவிக்க முடியும்?**

# உபத்திரவத்தின் மத்தியில் உண்மை

கிறிஸ்தவமார்க்கத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில், உபத்திரவம், சிறை, பாடு ஆகியவற்றின் மத்தியில் கிறிஸ்தவத் திருச்சபை வேகமாக வளர்ந்தது. தங்களை முற்றிலும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த மெய்விசுவாசிகள் எல்லோரும் பரிசுத்த ஆவியில் நிறைந்து, அவருடைய வார்த்தையை வல்லமையோடு அறிவித்தார்கள்; ஆயிரக்கணக்கானோர் மனமாறினார்கள்.

**புதிய ஏற்பாட்டு திருச்சபை சந்தித்த சவால்கள், அது வேகமாக வளர்ந்ததற்கான காரணம்பற்றி பின்வரும் வசனங்கள் சொல்லுவது என்ன? அப் 2:41; 4:4,31; 5:42; 8:1–8.**

சீடர்கள் அச்சுறுத்தல்களையும், சிறையிருப்பையும், உபத்திரவத்தையும், மரணத்தையும் சந்திக்க வேண்டியதாயிற்று; அப் 4:17; 5;17,18; 8:1; 7:59; 12:2. ஆனாலும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப்பற்றி பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தைரியமாக அறிவித்தார்கள்; யூதேயா, கலிலேயா, சமாரியா முழுவதிலும் சபைகள் பெருகின. அப் 9:31.

நரகத்தின் அரண்கள் அசைக்கப்பட்டன. சாத்தானின் கட்டுகள் தகர்க்கப்பட்டன. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமைக்கு எதிராக அஞ்ஞான நம்பிக்கைகள் நொறுங்கின. மேற்கொள்ளக் கடினமாகத் தோன்றின தடைகளுக்கு எதிராக சுவிசேஷம் வெற்றிபெற்றது. சீடர்கள் அதன்பிறகு மேலறையில் ஒளிந்து கிடக்கவில்லை. பயம் நிழல்போல மறைந்தது.

சீடர்களுடைய இருதயங்களில் விசுவாசம் நிரம்பியது. உயிர்த்தெழுந்த தங்கள் இரட்சகரை ஒருமுறை பார்த்த அனுபவம் அவர்கள் வாழ்க்கையையே மாற்றியது. வாழ்வதற்கு ஒரு புதிய நோக்கத்தை இயேசு அவர்களுக்குக் கொடுத்தார். நம் ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் ஊழியக் கட்டளையைக் கொடுத்தார். மாற்கு 16:15. அது மட்டுமல்லாமல், பின்வரும் மாபெரும் வாக்குறுதியையும் கொடுத்தார்: 'பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்'. அப் 1:8.

பூமியின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுவிசேஷம் நுழைந்தது. கொலோ 1:23. சீடர்களில் கடைசியாக இருந்த யோவான், முதலாம் நூற்றாண்டின் இறுதியில் மரித்தார்; அவரைத் தொடர்ந்து சத்தியத்தின் தீபத்தை மற்றவர்கள் பெற்றுக்கொண்டு, உயிரோடிருக்கிற கிறிஸ்துவைப்பற்றி அறிவித்தார்கள். இன்றைய துருக்கியின் வடக்குக் கடற்கரைமேல் அமைந்திருந்த பித்தினியா எனப்படும் ரோம மாகாணத்தின் ஆளுனராக இருந்த இளைய பிளைனி, சுமார் கி.பி. 110இல் பேரரசன் டிராஜனுக்கு பின்வருமாறு ஒரு கடிதத்தில் எழுதினார்: அதில், 'வயது, இனம், பாலினம் பாகுபாடின்றி பலர் குற்றஞ்சாட்டப்பட்டு அபாயத்திற்கு ஆளாகின்றனர்; இந்த மூடநம்பிக்கை தொற்று நோய்போல நகரங்களில் மட்டுமல்ல, கிராமங்களிலிலும் கிராமப்புறக் குடியிருப்புகளிலும் பரவியிருக்கிறது'.

பிசாசின் கொடிய தாக்குதல்களுக்கு மத்தியிலும், கிறிஸ்தவத் திருச்சபை வேகமாக வளர்ந்தது.

---

**கடைசிக்கால திருச்சபையினரான நமக்கு உதவும்படி ஆதிகாலத் திருச்சபையிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

# சமுதாயத்தின்மீது அக்கறை

அங்கத்தினர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததால் மட்டுமல்ல, அதன்படி வாழ்ந்ததாலும் ஆதிகாலத் திருச்சபை வளர்ந்தது. இயேசு 'கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெபாலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவி சேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்' கிறிஸ்துவினுடைய ஊழி யப்பாணியை விசுவாசிகள் பின்பற்றினார்கள். மத் 4:23. இயேசு மக்கள்மீது மிகுந்த அக்கறை காட்டினார்; புதிய ஏற்பாட்டு திருச்சபையும் அப்படியே செய் தது. மனிதர்களின் தேவைகளைச் சந்திப்பதில் காணப்பட்ட இந்தச் சுயநலமற்ற அன்பும், அர்ப்பணிப்பும், அவற்றோடு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நற்செய்தியை அறிவித்ததும், கிறிஸ்தவத் திருச்சபையின் ஆரம்ப நூற்றாண்டு களில் உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணின.

**இன்று சூழ்நிலைகள் மாறியிருந்தாலும், மெய்யான கிறிஸ்தவமார்க்கம்பற்றி பின் வரும் வசனங்கள் சொல்வது என்ன?? அப் 2:44-47; 3:6-9; 6:1-7.**

புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி னார்கள்; பேதுரு சொன்னதுபோல அவர்கள், 'பரிசுத்த ஆவியினாலும் வல்ல மையினாலும் அபிஷேகம்பண்(ணப்பட்டார்கள்)'. கிறிஸ்துவோடு 'தேவன் இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'. அப் 10:38. கிறிஸ்துவின் சபைதாம் பூமியில் அவருடைய சரீரமாக இருக்கிறது; அவருடைய சரீரத்தினர், பாதிப்போடும் வேதனையோடும் இருந்த மனுக்குலத்தின்மேல் அவரது அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தினார்கள்.

பிரபஞ்சத்தில் நடைபெற்று வருகிற மாபெரும் போராட்டத்தில், மனிதர் களில் உள்ள தேவனுடைய சாயலைக் கெடுப்பதற்கு பிசாசு விரும்புகிறான். சுவி சேஷத்தின் நோக்கம் மனிதர்களில் உள்ள தேவசாயலை மீட்டெடுப்பதாகும். அதில் சரீர, மன, உணர்வுரீதியிலான, ஆவிக்குரிய குணமாகுதலும் அடங்கும்.

யோவான் 10:10இல் நம் ஒவ்வொருவரையும் குறித்த தம் திட்டத்தை இயேசு வெளிப்படுத்தியிருக்கிறார். 'திருடன் திருடவும் கொல்லவும் அழிக்க வும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'. நாம் உடல் ரீதியாக ஆரோக்கியமாகவும், மனரீதியாக விழிப்பாகவும், உணர்ச்சிரீதியாக நிலையாகவும், ஆவிக்குரிய ரீதியாக பூரண நலனோடும் இருக்க விரும்புகிறார்.

தாம் திரும்பிவருவதாக அவர் கொடுத்துள்ள வாக்குறுதியின் பின்னணியில் இது முற்றிலும் உண்மை. உலகம் மிகப்பெரிய நெருக்கடியில் இருக்கிறது. இயேசு வின் வருகைக்குமுன் பூமியில் மிகப்பெரிய அழிவு நேரிடவிருப்பதை மத் 24ம் லூக் 21ம் முன்னுரைக்கின்றன. தம் குணமாகுதலின் கிருபையால் கிறிஸ்து நம் மைத் தொடும்போது, கிறிஸ்துவின் அந்தத் தொடுதலால் மற்றவர்களை நாம் தொட்டு, அவர்கள் குணமாகவேண்டும் என்கிற ஏக்கத்தைப் பெறுகிறோம். துன்பத்தில் இருக்கிற ஒரு உலகத்தில், நாம் மற்றவர்களை தம் அன்பால் தொடும் படிக்கு தம் தூதுவர்களாக கிறிஸ்து நம்மை அனுப்புகிறார். புதிய ஏற்பாட்டு கிறிஸ் தவ மார்க்கத்தில் ஒருவருக்கொருவரும், சமுதாயத்திற்குள்ளும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினார்கள்.

---

**சாத்தானின் குற்றச்சாட்டுகள் தவறானவை என்பதை நிரூபிப்பதில் கிறிஸ்துவுடன் ஒத்துழைப்பதில் திருச்சபைக்கு என்ன பங்கு உள்ளது?**

# அன்பின் பாரம்பரியம்

**மாபெரும் போராட்டத்தில் தேவனுடைய அரசாங்கத்திற்கு எதிராக சாத்தான் முன் வைக்கிற சவால்பற்றி யோவான் 13:35; 1யோவான் 4:21 வெளிப்படுத்துவது என்ன? மெய்க்கிறிஸ்தவமார்க்கத்தின் சாராம்சம்பற்றி அவை சொல்லுகின்றன?**

முதல் நூற்றாண்டுகளில் அன்பே கிறிஸ்தவ சமுதாயங்களின் அடிப்படை விதியாக இருந்தது. ஆரம்பக்கால கிறிஸ்தவ இறையியல் வல்லுனரான டெர்ட்டூலியன் இவ்வாறு சொல்கிறார்: 'பிறர் நம்மீது, மெய் அன்போடு செயல்படுகிற வர்கள் என்கிற முத்திரையைப் பதிக்கிறார்கள். எப்படி ஒருவருக்கொருவர் அன்பாகஇருக்கிறார்கள்பாருங்கள்என்று மற்றவர்கள்பேசிக்கொள்கிறார்கள்.'

தேவன்பின் மிகப்பெரிய வெளிப்பாடுகளை சுமார் கி.பி. 160, கி.பி. 260 களில் உண்டான மாபெரும் பெருந்தொற்றுகளின்போது காணலாம். கிறிஸ்தவர்கள் முன்வந்து, வியாதிப்பட்டிருந்தவர்களுக்கும், மரணத்தருவாயில் இருந்தவர்களுக்கும் ஊழியம் செய்தார்கள். இந்த கொள்ளைநோய்களால் லட்சக்கணக்கானோர் மரித்தார்கள்; பல கிராமங்களும் நகரங்களும் மக்கள் சஞ்சாரமற்ற இடங்களாயின. கிறிஸ்தவர்களின் சுயநலமற்ற, தியாகமனப்பான்மையுள்ள, அக்கறை மிக்க, அன்புநிறைந்த ஊழியம்தான் மக்கள்மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கியது. இந்த இரண்டு பெருந்தொற்றுகளைத் தொடர்ந்து ஆயிரம், பதினாயிரம், இலட்சக்கணக்கானோர், இயேசுவில் விசுவாசமுள்ளவர்களாக மறினார்கள். அன்பும் அக்கறையும் காட்டியதும், வியாதியிலும் மரணத்தருவாயிலும் இருந்தவர்களை ஒழுங்கோடு தன்னலமில்லாமல் கவனித்ததும் இந்த விசுவாசிகள்மீதும் அவர்கள் சேவித்த கிறிஸ்து மீதும் ஒரு பிரமிப்பை உண்டுபண்ணின.

இந்த வரலாற்று நிகழ்வுகள்பற்றி கிறிஸ்தவ மார்க்கத்தின் எழுச்சி என்கிற புத்தகத்தில் புதிய, பிரகாசமான வெளிச்சத்தில் ராட்னி ஸ்டார்க் என்பவர் சொல்லியிருக்கிறார். இரண்டாவது பெருந்தொற்றின்போது, பெரும்பாலும் யூதேய -கிறிஸ்தவர்களே நிரம்பியிருந்த கிறிஸ்தவ சமுதாயத்தினர் செவிலியர்கள் போலச் செயல்பட்டு, பாடுகளில் இருந்த மக்கள் பிழைக்கும்படி அவர்களது அடிப்படை தேவைகளைச் சந்தித்ததாக எழுதுகிறார்.

'சுமார் கி.பி. 260இல், இரண்டாவது பெருந்தொற்று உச்சக்கட்டத்தில் இருந்த போது, உள்ளூர் கிறிஸ்தவர்கள் உதவிசெய்ய தைரியமாக முன்வந்தார்கள்; அந்த உதவிகளைப் பாராட்டி, டினோசியஸ் ஒரு நீளமான நன்றிக் கடிதம் எழுதினார்; அக்கிறிஸ்தவர்களில் பலர் மற்றவர்களுக்கு உதவின நிலையிலேயே மரித்துப்போனார்கள்.

'நம் கிறிஸ்தவ சகோதரர்களில் பலர் அளவில்லா அன்பையும் மெய்ப்பற்றையும் வெளிப்படுத்தினார்கள்; தங்களைக் காப்பாற்ற முயலவில்லை; மற்றவர்களைப்பற்றி மட்டுமே யோசித்தார்கள். ஆபத்தை எண்ணாமல், வியாதியஸ்தர்களைக் கவனித்தார்கள்; கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு ஊழியம் செய்தார்கள்; மேலும், அவர்களோடு சேர்ந்து இந்த வாழ்க்கையைவிட்டு சந்தோஷமாகப் பிரிந்து சென்றார்கள்; ஏனென்றால் மற்றவர்களிடமிருந்து இவர்களுக்கு வியாதி தொற்றியது, அக்கம்பக்கத்தில் இருந்தவர்களின் வியாதியை தங்களுக்கு இழுத்துக் கொண்டார்கள்; அவர்களது வேதனைகளைசந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள்'.

---

**இதில் நமக்குள்ள செய்தி என்ன? இதே சுயநலமற்ற அன்பை நாமும் வெளிப்படுத்தும்படிக்கு சுயத்திற்கு மரிப்பதற்கு எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்? அது எளிதல்ல, அல்லவா?**

# மேலும் படிக்க:

'சுவிசேஷம் தொடர்ந்து பரவியது; அதைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது; ரோமின் கழுகுகள் புகமுடியாத இடங்களிலும் சுவிசேஷம் ஊடுருவியது. உபத்திரவத்தை அதிகப்படுத்தி வந்த அஞ்ஞான அதிகாரிகளிடம் ஒரு கிறிஸ்தவர், "நீங்கள் எங்களைக் கொல்லலாம், சித்திரவதை செய்யலாம்; குற்றப்படுத்தலாம் நாங்கள் நிரபராதிகள் என்பதற்கு உங்கள் அநீதியே சாட்சி. உங்கள் கொடுமைகளும்கூட உங்களுக்குப் பலன் தராது" என்றார். பிறரையும் தங்கள் நம்பிக்கைக்கு இழுத்த வலுவான அழைப்பாக அது இருந்தது. "எந்த அளவிற்கு நீங்கள் எங்களை வெட்டித் தள்ளுகிறீர்களோ, அந்த அளவுக்கு அதிகமாக நாங்கள் வளர்வோம்; கிறிஸ்தவனின் இரத்தம் விதையாக விதைக்கப்படுகிறது"'.[1]

'துன்மார்க்கரின் கரத்தில் நீதிமான்கள் உபத்திரவப்படுவதை தேவன் அனுமதிக்கிறார்; புரிந்துகொள்ளக் கடினமான இந்த தேவநடத்துதல்களால் விசுவாசத்தில் பலவீனர்கள் பலர் பெரும் குழப்பத்திற்கு ஆளாகிறார்கள். மிகவும் கீழ்த்தரமானவர்கள் செழிக்கவும், மிகநல்லவர்கள் அவர்களுடைய கொடுமையான ஆதிக்கத்தால் சித்திரவதை அடையவும் தேவன் அனுமதிப்பதால், சிலர் தேவன்மீதுள்ள தங்கள் நம்பிக்கையைக் கைவிட ஆயத்தமாக உள்ளனர். "நீதியும் இரக்கமும் எல்லையில்லா வல்லமையும் உள்ள ஒருவர் எவ்வாறு இப்படிப்பட்ட அநீதியையும் ஒடுக்குதலையும் அனுமதிக்கிறார்? " என்று கேட்கிறார்கள். இந்த விஷயத்தில் நாம் செய்யக்கூடியது எதுவுமில்லை. தேவன் தமது அன்பைப்பற்றிப் போதுமான சாட்சிகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய நல்ல தன்மைகளை நாம் சந்தேகிக்கக்கூடாது. ஏனென்றால், தேவனுடைய முன்னறிவின் செயல்பாடுகளை நாம் புரிந்துகொள்ள முடியாது —Tertullian, Apology, paragraph 50.'.[2]

[1] Ellen G. White, The Great Controversy, pp. 41, 42.

[2] The Great Controversy, p. 47.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உபத்திரவத்தில் என்ன மதிப்பு இருக்கிறது? தம் மக்கள் சில சமயங்களில் உபத்திரவப்பட தேவன் அனுமதிப்பது ஏன்? ஆதிகாலத் திருச்சபையில் நடந்ததுபோல, சிலசமயங்களில் உபத்திரவத்தால் நன்மை உண்டாகியிருக்கிறது; ஆனால் அதால் நன்மை ஏதும் உண்டாகாதது போலத் தோன்றும்போது என்ன செய்வது? அதுபோன்ற சூழ்நிலைகளில், தேவனுடைய அன்பை தனிப்பட்ட விதத்தில் அனுபவிப்பது விசுவாசத்தைப் பராமரிப்பதற்கு ஏன் அவசியமாக இருக்கிறது?*

2. *பின்வரும் கேள்விகளை நண்பர் ஒருவர் உங்களிடம் கேட்டால் என்ன பதில் சொல்லுவீர்கள்: 'நான் உபத்திரவப்படும்போது தேவன் எங்கே இருக்கிறார்? அவர் என்னை நேசிக்கிறார் என்றால், ஏன் எனக்கு இப்படியொரு கஷ்டம் ஏற்பட்டிருக்க வேண்டும்?'*

3. *உலகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அக்கறைமிக்க ஒரு சமுதாயமாக உங்கள் உள்ளூர் திருச்சபை எவ்வாறு மாறமுடியும்? இதை இந்த வாரம் எவ்வாறு நடைமுறை ரீதியாகச் செயல்படுத்தலாமென விவாதியுங்கள்.*

# இத்தாலியில் உண்மையுள்ள ஜிம்னாஸ்ட்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

ஏழு வயது சாராவுக்கு ஜிம்னாஸ்டிக் பிடிக்கும். அதை எளிதாகச் செய்வாள்; நல்ல பயிற்சியும் பெற்றிருந்தாள். குறிப்பாக கார்ட்வீல் பிடிக்கும். அதில் தொடர்ச்சியாக அவளால் விளையாடமுடியும். ஆனால் ஜிம்னாஸ்டிக்கைவிட அதிகமாக சாராவுக்கு இன்னொன்றும் பிடிக்கும். அதாவது, தேவனை அதிகமாக நேசித்தாள்.

இத்தாலியில் லெஸி நகரத்தில் வசிக்கிறாள். ஓய்வுநாளன்று அங்கு ஒரு முக்கிய விளையாட்டு நிகழ்ச்சி நடக்கப்போவதாக அவளுடைய பயிற்சியாளர் சொன்னார். ஆனாலும் ஆலயத்திற்குச் செல்லாமல் அதில் கலந்துகொள்ள விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சி வருடத்திற்கு ஒரு முறைதான் நடைபெற்றது; சிறுவர்கள் தாங்கள் கற்றுக் கொண்டவற்றை தங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு முன்பாகச் செய்து காட்டுவார்கள்.

அந்த நிகழ்ச்சி ஓய்வுநாளில் இருப்பதாக பயிற்சியாளர் சொன்னதும் சாராவுக்கு கவலையாக இருந்தது.

வீட்டில் சாரா கவலையோடு இருந்ததை அம்மா கவனித்தார்.

"தேவனால் எந்தப் பிரச்சனையையும் தீர்க்கமுடியும்" என்று சொன்னார்.

ஓய்வுநாள் பிரச்சனையை தேவனிடம் கொண்டுசெல்லுமாறு சொன்னார்.

அன்று சாயங்காலத்தில் சாரா, 'அன்பு தேவனே, அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மாட்டேன் என்பது கவலையாக இருக்கிறது. ஆனால் உம் சித்தப்படி நடக்கட்டும்' என்று ஜெபித்தாள்.

சாராவும் மற்ற பிள்ளைகளும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை தோறும் ஜிம்னாஸ்டிக் பயிற்சி செய்வார்கள். செவ்வாய்க்கிழமை பயிற்சிக்கான தேதியை பயிற்சியாளர் அறிவித்திருந்தார். செவ்வாய்க்கிழமை இரவும், வியாழக்கிழமை இரவும் சாரா ஜெபித்தாள். வியாழக் கிழமை பயிற்சியின்போது, ஜிம்னாஸ்டிக் நிகழ்ச்சி நடைபெறுகிற தேதி மாற்றப்பட்டதாக பயிற்சியாளர் அறிவித்தார்.

"நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு சம்பந்தப்பட்ட காரணங்களுக்காக நிகழ்ச்சியை ஒருநாள் தள்ளி நடத்த வேண்டியுள்ளது" என்று சொன்னார்.

சாராவால் நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியில் துள்ளினாள்! சற்று நேரம் கழித்து அந்தச் செய்தியை அம்மாவிடம் சொன்னபோது, அம்மாவும் மகிழ்ச்சியடைந்தார்.

"நீ எப்போதும் தேவனை நம்பவேண்டும்" என்று சொன்னார்.

சாராவும் அப்படியே செய்கிறாள். ஜெபித்து, பதில் கிடைத்த முதல் அனுபவமாக இருந்தது. அது தேவனில் அவளது விசுவாசத்தை அதிகம் பெலப்படுத்தியது. ஓய்வுநாளில், தேவன் செய்த அற்புதத்தை சபையில் சாட்சி சொன்னாள். பிரசங்கியார் ஒருவர் அந்த ஜெபம்பற்றி ஒரு பிரசங்கம் தயார் செய்து, மேடைக்கு வந்து தன் சாட்சியைச் சொல்லுமாறு சாராவை அழைத்தார்.

"வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போதெல்லாம் நான் ஜெபித்திருக்கிறேன்" என்று சொன்னாள். சாராவுக்கு இப்போது 19 வயதாகிறது.